கள்ளக்குறிச்சி ஏமப்பேர் புறவழி சாலை ரவுண்டானா அருகில் புதிய புறநகர் பேருந்து நிலையம் ரூ.46.30 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது, இவ்விழாவில் அமைச்சர்கள் எ.வ.வேலு, ஆர்.ராஜேந்திரன் ஆகியோர் பங்கேற்று அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்கள், மேலும் இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ். பிரசாந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் க.கார்த்திகேயன், தா.உதயசூரியன், ஆ.ஜெ.மணிக்கண்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. தொகுதி வாரியாக பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) பாக நிலை முகவர்கள் (BLA - 2) பயிற்சி பாசறைக் கூட்டங்கள்!

மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை முகாமில் படிவத்தில் நிரப்பப்படும் விவரங்களை பிரத்தியேகமாக செயலியில் (APP) உள்ளீடு செய்யப்பட வேண்டியது குறித்து தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி, கோவில்பட்டி சட்டமன்ற தொகுதி, விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிகளில் வாக்குச்சாவடி வாரியாக நியமிக்கப்பட்டுள்ள பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) பாக நிலை முகவர்கள் (BLA 2), தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பயிற்சி பாசறைக் கூட்டங்கள் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் படி நடைபெற உள்ளது.

தேதி	நேரம்	தொகுதி	இடம்
29.06.2025	காலை 10 மணி	விளாத்திகுளம் சட்ட மன்ற தொகுதி	G.V.மஹால், விளாத்திகுளம்
29.06.2025	மாலை 6 மணி	தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி	கலைஞர் அரங்கம்,தூத்துக்குடி
30.06.2025	மாலை 6 மணி	கோவில்பட்டி சட்டமன்ற தொகுதி	சத்தியபாமா திருமண மண்டபம், கோவில்பட்டி

அமைச்சர் பி. கீதாஜீவன்
செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

'ஓரணியில் தமிழ்நாட்டை ஒருங்கிணைக்க உடன்பிறப்பே வா!'

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக BLA2, BDA (டிஜிட்டல் தொழில்நுட்பம்) பயிற்சிக் கூட்டம்!

மாவட்ட பொறுப்பாளர் – செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கழகத்தலைவர் - தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி "ஓரணியில்தமிழ்நாடு" என்ற முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து விழுப்புரம் மாவட்டத்திற்குட்பட்ட செஞ்சி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒன்றிய, பேரூர் கழகங்களில் வாக்குச்சாவடி வாரியாக பாகநிலை முகவர்கள் (BLA-2) மற்றும் பூத் டிஜிட்டல் முகவர் (BDA) பயிற்சிக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்டம், செஞ்சி சட்டமன்ற தொகுதிகளுக்கு தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் நியமிக்கப்பட்டிருக்கும் OTN AC மற்றும் தொகுதி பார்வையாளர்கள் முன்னிலையில் கீழ்க்கண்ட தேதிகளில் தொகுதி வாரியாக ஒன்றிய பேரூர் கழக (BLA-2) மற்றும் பூத் டிஜிட்டல் முகவர் (BDA) பயிற்சி நடைபெறவுள்ளது.

நாள்& நேரம்	தொகுதி	ஒன்றியம்	இடம்
29.06.2025 காலை 10.00 மணி	செஞ்சி	செஞ்சி - கிழக்கு -மேற்கு -மத்திய ஒன்றியம் செஞ்சி, அனந்தபுரம் பேரூர் கழகம்	வள்ளி அண்ணாமலை திருமண மஹால் செஞ்சி
29.06.2025 மாலை 04.00 மணி	செஞ்சி	மேல்மலையனூர் கிழக்கு - மேற்கு மத்திய ஒன்றியம்	சிவனருள் திருமண மண்டபம் மேல்மலையனூர்

பயிற்சிக் கூட்டத்தில் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் மட்டுமன்றி BLA2க்களும் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

செஞ்சி கே.எஸ். மஸ்தான் எம்.எல்.ஏ.
பொறுப்பாளர், விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

மரக்காணம் - ஏந்தூரில் ரூ.95 லட்சத்தில் புதிய சமுதாயக்கூடம்!

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்! தயாளன் தலைமை!

திண்டிவனம், ஜூன் 28- மரக்காணம் ஒன்றியம் ஏந்தூர் ஊராட்சியில் 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாயக்கூடம் அமைப்பதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார். மரக்காணம் ஒன்றிய பெருந் தலைவர் தயாளன் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் ஏந்தூர் ஊராட்சியில் சமுதாயக்கூடம் அமைக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

பொது மக்களின் கோரிக்கையை ஏற்றுஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில் கனிமம் மற்றும் சுரங்கத்துறைதிட்டத்தின் கீழ் 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏந்தூர் ஊராட்சியில் புதிய சமுதாயக்கூடம் கட்டுவதற்கு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் தலைமை தாங்கினார். துணை சேர்மன் பழனி, ஒன்றிய கவுன்சிலர் கஸ்தூரி சந்திரசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி மன்ற தலைவர் உமா ரவிச்சந்திரன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு 95லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சமுதாயக்கூடம் கட்டுவதற்கு பணியை தொடங்கி வைத்தார். தொடர்ந்து கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் முழு மானியத்தில் விவசாயிகளுக்கு தென்னங்கன்றுகளை அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஷீலா தேவி சேரன், பழனி, ரவிக்குமார், ரவிச்சந்திரன், அர்ஜுனன், ஆர். பாலா, நாகஜோதி கணேஷ் மகேஸ்வரி எத்திராஜ், லட்சுமி பாலு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம்

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் நீலகிரி மாவட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.எம்.ராஜு அவர்கள் மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதாலும், முஸ்தபா அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாலும்,2 (இரண்டு) தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் நிரப்பப்பட வேண்டி இருப்பதால்; பொதுக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஷீலாகேத்ரின் அவர்கள் மறைவெய்திய காரணத்தாலும் - க. ராஜா (எ) ராஜகுமார் மற்றும் மா.தொரை ஆகியோர் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டதாலும், 3 (மூன்று) பொதுக்குழு உறுப்பினர்கள் நிரப்பப்பட வேண்டி இருப்பதால், மேற்சொன்ன பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜூன் 25 (புதன்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

நீலகிரி மாவட்டம், இரண்டு தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பொறுப்புகளுக்கு **கே. தம்பி இஸ்மாயில், திருமதி சுனிதா நேரு** ஆகிய இரண்டு பேர் மற்றும் மூன்று பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புகளுக்கு அ.லியாகத் அலி, ந.மகேஷ், திருமதி எம்.வாணீஸ்வரி ஆகிய மூவர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

நீலகிரி மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக

கே.தம்பி இஸ்மாயில்,30/40, பக்கீர் முகமது தெரு, மெயின் பஜார், உதகை, நீலகிரி மாவட்டம்-643 001 **அவர்களும்;**

திருமதி.சுனிதா நேரு 72-பி, குமரன் நிலையம், காமராஜபுரம், உழவர்சந்தை முன்புறம், குன்னூர், நீலகிரி மாவட்டம் **அவர்களும்;**

நீலகிரி மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர்களாக

அ.லியாகத் அலி 13/168, காசிம் வயல், கூடலூர் பஜார், நீலகிரி மாவட்டம் - 643 212 **அவர்களும்;**

ந.மகேஷ், 1/37, கெந்தொரை கிராமம் & அஞ்சல், உதகை, நீலகிரி மாவட்டம் - 643 002 **அவர்களும்;**

திருமதி. எம்.வாணீஸ்வரி, 8பி-1, பீட்டன்ஸ் சாலை, பேபி ஹால் அருகில், உதகை, நீலகிரி மாவட்டம்-643001 **அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக** அறிவிக்கப்படுகிறது.

" அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 28.06.2025.

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தமிழே பேசத் தெரியாதவர்கள் தமிழ்நாட்டை

டெல்லியிலிருந்து ஆள நினைக்கிறார்கள் - இதைத் தடுப்பதுதான் 'ஓரணியில் தமிழ்நாடு!'

மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பேட்டி!

சென்னை, ஜூன் 29-

தமிழே பேசத் தெரியாதவர்கள் தமிழ் நாட்டை டெல்லியிலிருந்து ஆள நினைக்கிறார்கள். இதைத் தடுப்பதுதான் ஓரணியில் தமிழ்நாடு செயல்திட்டத்தின் நோக்கம் ஆகும் என்று செய்தியாளர்கள் சந்திப்பில் கழக மாநிலங்க ளவை உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், எம்.பி. தெரிவித்துள்ளார்.

27.06.2025 அன்று மாலை திமுக மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் பி.வில்சன் சென்னை தேனாம்பேட்டை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களை சந்தித்தது குறித்த அறிக்கை:-

ஓரணியில் தமிழ்நாடு என்கிற இந்தச் செயல் திட்டத்தை பற்றி விளக்கிக் கூற வந்திருக்கிறேன். சமீப காலமாகத் தமிழ்நாடு பண்பாடு - பொருளாதாரம் அரசியல் ரீதியாக பல அநீதிகளை சந்தித்து வருகிறது. கீழடி ஆய்வுக்கு அங்கீகாரம் அளிக்காதது, ஹிந்தி திணிப்பு, கல்வி நிதி மறுப்பு, கூட்டாட்சி முறையைச் சிதைப்பது, மக்கள் தொகை கணக்கெடுப்பைக் காலம் தாழ்த்துவது, நீட் தேர்வு மூலம் மாணவர்களின் மருத்துவக் கனவை சிதைப்பது, தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் நம் உரிமை குரலை நசுக்கி பிரதிநிதித்துவத்தை குறைப்பது என தமிழ்நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு கொண்டே உள்ளது.

ஒரு ரூபாயில் 26 பைசாதான் வழங்குகிறார்கள்!

இது மட்டுமல்ல நம்ம கொடுக்கிற ஒரு ரூபாய் வரிப் பணத்தில் நமக்கு திருப்பி 26 பைசாதான் தருகிறார்கள். உங்கள் எல்லாருக்கும் தெரியும். மிக்ஜாங் என்ற ஒரு புயல் காரணமாக, மழையின் காரணமாக 2023ல் 37,902 கோடி சேதம் ஏற்பட்டு தமிழக அரசு இழப்பீடு ஒன்றிய அரசிடம் கேட்கும் பொழுது, வெறும் 276 கோடி மட்டும் தான் கொடுத்தார்கள். அதுமட்டுமில்லை, அவர்கள் பாக்கி பணத்தை தராததால் உச்சநீதிமன்றத்தைத் தமிழக அரசு நாடியுள்ளது.

இது தவிர தேசிய கல்வி திட்டம் என்கிற பெயரில் மும்மொழி கல்வி திட்டத்தை திணிக்க பார்க்கிறார்கள். ஹிந்தியை கட்டாய கல்வியாகக் கொண்டுவர பார்க்கிறார்கள். அந்த ஹிந்தி திணிப்பை எதிர்த்ததால் 2152 கோடியை இன்று ஒன்றிய அரசு நமக்கு தராமல் வஞ்சித்துவிட்டது. இதை எதிர்த்து முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பெயரில் உச்சநீதிமன்றம் சென்றுள்ளோம்.

இதையெல்லாம் ஏன் சொல்றேன் என்றால், நமக்கு தர வேண்டிய பணம் நம்முடைய உரிமைகள் எல்லாவற்றையும் அவர்கள் தட்டி பறிக்கிறார்கள். அதைத்தான் சுட்டிகாட்டுறேன். நம் தமிழ்நாட்டின் பெருமையையும் மாண்பையும் சிதைக்கத் திட்டமிடுபவர்கள், ஒரு உண்மையை மறந்துவிட்டார்கள். அவர்கள் மறைக்க நினைப்பது சிறிய சுடரை அல்ல; அது ஒரு உதய சூரியன் என்பதை மறந்துவிடுகின்றார்கள். உதய சூரியனை எவர் தடுத்தாலும், அதன் கதிர்கள் தடையை ஊடுருவி பிரகாசிக்கும். சூரியனின் குணமே தமிழ்நாட்டின் மக்களின் குணம்.

அடக்குமுறைகளை தகர்த்து எழுச்சியுடன் தமிழ்நாடு எழும்!

எவ்வளவு முறை எதிரிகள் முயன்றாலும், ஒவ்வொரு முறையும் அடக்குமுறைகளை தகர்த்து எழிச்சியுடன் தமிழ்நாடு எழும். நமது வானில் ஆபத்து மேகங்கள் சூழ்ந்த போதெல்லாம், இருளை அழித்து, வெற்றி வெற்றி வெளிச்சத்தை கண்டடைந்தவர்கள் தமிழ்நாட்டு மக்கள். ஏனெனில் தமிழர்கள் வெற்றி சூத்திரமே ஒன்றே ஒன்றுதான். ஆபத்து வரும்போதெல்லாம் நாம் ஒன்றிணைவோம். நமது பலம் ஒருபோதும் குன்றியதில்லை. அச்சுறுத்தப்படுத்தும்போது நாம் ஒன்றுபடுகிறோம். ஒடுக்கப்படும் போது நாம் வீறு கொண்டு எழுகிறோம்.

இப்பொழுது தமிழ்நாடு மீண்டும் ஒரு முறை ஒன்றாய், ஓரணியில் திரண்டு நமது மண் மொழி மானம் மீது தொடுக்கப்படும் போருக்கு எதிராக போராடி வெல்ல தயாராகிறது. இந்த ஓரணியில் தமிழ்நாடுடைய நோக்கமே மண் மொழி மானம் ஆகிய மூன்றும் நாம் காக்க ஓரணியில் திரள வேண்டும் என்பதுதான்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் கட்டி காத்துவந்த நமது மண்ணின் பெருமை, இப்பொழுது நமது இளைஞர்களின் கைகளில் உள்ளது. நமது முன்னோடிகள் நமக்காக போராடியது எல்லாம் எதற்காக வெறுமனே நாம் உயிர் வாழ்வதற்கா? இல்லவே... இல்லை. நாம் தலைநிமிர்ந்து சுயமரியாதை உணர்வோடு, பெருமையுடன் வாழவே அவர்கள் போராடினர். இன்றைக்கு நம்முடைய கீழடி ஆய்வுக்கு அங்கீகாரம் கொடுக்காமல் இருக்கிறார்கள். அந்த கீழடி ஆய்வு ரிப்போர்ட்டை தயார் செய்தவர் தூக்கி எறியப்படுகிறார்.

அந்த அளவுக்கு இவர்கள் தமிழ்நாடு மீது வெறுப்பை கொண்டுள்ளார்கள். இன்று இந்த வெறுப்பிற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பது நமது ஒவ்வொரு ஒவ்வொருவரின் கடமையாக ஆகும். நமது குழந்தைகளுக்காகவும் இனி வரவேற்கும் நமது தலைமுறைக்காகவும் நாம் ஒன்றுபடுவோம். எந்த சக்தியாலும் வெல்ல முடியாத, எந்த கூட்டத்தாலும் உடைக்க முடியாத, எந்த வல்லமையாலும் தகர்க்க முடியாத மலைபோல் எழுவோம். நாம் ஒன்றாக ஓரணியில் நின்றால், நம்மை வீழ்த்த எவராலும் முடியாது. இதுவே ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு.

எல்லோரும் ஒன்றாக இணைய வேண்டும். இணைந்து போராட வேண்டும் என்பதுதான் இதன் நோக்கமே. வடக்கில் பழவேற்காடு முதல் தெற்கில் கன்னியாகுமரி வரை மேற்கில் ஆணைக்கட்டி முதல் கிழக்கில் நாகப்பட்டினம் வரை ஜாதி மதம் அரசியல் சார்பு ஆகியவற்றைக் கடந்து ஓரணியில் நிற்கிறது தமிழ்நாடு. இது வெறும் பிரச்சாரம் அல்ல. தமிழ்நாட்டின் மண் மொழி மானம் ஆகியவற்றைப் பாதுகாக்க ஒன்றிணைந்து போராடி வெல்வதற்காக மாபெரும் முன்னெடுப்பு.

எங்களுடைய இலக்கு 45 நாட்களில் 68ஆயிரம் வாக்குச்சாவடி முகவர்கள் அவர்கள் மூலமாக இரண்டு கோடி குடும்பங்கள் சென்று பார்ப்பது. 100 சதவீதம் ஒரு கோடி குடும்பங்களை பதிவு செய்ய வேண்டும். இந்த இரண்டு கோடி உறுப்பினர்கள் சேர்க்கையும் சேர்க்க வேண்டும் என்பது எங்களுடைய இலக்கு. 30% உறுப்பினர்கள் அனைத்து வாக்கு சாவடிகளும் இணைக்க வேண்டும். இதுதான் இலக்கு. இந்த ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பின் மூலம் தமிழ்நாட்டு அனைத்து குடும்பங்களும் ஒரு குடையின் கீழ் ஒன்றாய் நாம் தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க ஒன்றிணைவார்கள்.

30 சதவிகித உறுப்பினர் சேர்ப்பு!

இந்த பரப்புரை மூலம் திமுக உறுப்பினர்கள் அனைவரும் குறைந்தபட்சம் தமிழ் நாட்டின் ஒரு கோடி குடும்பங் களை ஒன்றிணைத்து ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு வாக்குசாவடிகளிலும் 30% மக்களை திமுக உறுப்பினராகப் பதிவு செய்வதே இலக்கு.

இந்த செயல் திட்டம் எப்படி செய்யப்படுகிறது என்பதை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை செய்தியை வீடு வீடாகக் கொண்டு செல்லும் வகையில் திமுகவின் கடைநிலை நிர்வாகிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பிடிஏ வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் புதியதாக 68000 வாக்குச்சாவடிகள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். இந்த வாக்குச் சாவடி டிஜிட்டல் மூவர்கள் எனும் புதிய டிஜிட்டல் பேராளிகளுக்கு கழகத்தின் சார்பில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த 68000 வாக்குசாவடி டிஜிட்டல் முகவர்கள் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரைக்காகத் தனித்துவமாக உருவாக்கப்பட்ட செயலி சமூக ஊடங்களைக் கையாளும் வகையில் இதற்காக ஒரு பயிற்சி தனியாக அளிக்கப்படுகிறது. வருகிற ஜூன் 28 மற்றும் ஜூன் 29ஆம் தேதியில் பயிற்சி பெறுவார்கள். ஏற்கனவே ஜூன் 25ஆம் அன்று கழக தகவல் தொழில் நுட்ப அணிக்கு மாநில அளவான பயிற்சி முகாம் நடைபெறும்.

ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை தனித்துவமான மூன்று நாள் நிகழ்வாக தொடங்கப்படும். முதல் நாள் அதாவது ஜூலை 1 மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் பத்திரிகையாளர்கள் சந்திப்பின் மூலம் பரப்புரையை தொடங்கி வைப்பார். பின்னர் 38 மாவட்ட தலைநகரங்களும் பத்திரிகையாளர்கள் சந்திப்பு நடைபெறும். இரண்டாம் நாள் அதாவது ஜூலை 2 அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் தமிழ்நாட்டு இளைஞர்களுடன் இணைந்து ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை தொடக்கத்தை குறிக்கும் வகையில் 76 கழக மாவட்டங்களிலும் நடை பயணமாக ஒற்றுமை பேரணியை மேற்கொள்வார்கள். அடுத்தது மூன்றாம் நாள் அதாவது ஜூலை 3 கழகத்தின் பிரத்தியோகிய பரப்புரை குழு அனைத்து வீட்டிற்கும் சென்று பரப்புரை செய்தியை எடுத்து கூறி, ஒவ்வொரு குடும்பத்தையும் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பின் கீழ் பதிவு செய்யும்.

ஒரு தனி தத்துவ பரப்புரை குழு உருவாக்கப்படும். இதில் ஒரு வாக்குச்சாவடி பாக முகவர், ஒரு வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர், ஒரு இளைஞர் பிரதிநிதி, ஒரு பெண் பிரதிநிதி, எட்டிலிருந்து 10 உள்ளூர் வாக்குச்சாவடி மேலாண்மை குழு, பிஎல்சி உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள். இது வந்து இந்த வாக்குச்சாவடி பரப்பரை குழுவுக்காக உள்ள இந்த காம்போசிஷன். வாக்குச்சாவடி பரப்புரை குழு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று ஒவ்வொரு குடும்பத்துடன் ஏழிலிருந்து 10 நிமிடங்கள் கலைந்துரையாடி ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் நோக்கத்தை விளக்கி உறுப்பினர் படிவம் மூலம் அக்குடும்பத்தை ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைப்பார். ஆர்வமுள்ளவர்கள் கழகத்தின் உறுப்பினர்களாக பதிவு செய்வார்கள்.

தமிழே பேச தெரியாதவர்கள் தமிழ் நாட்டை டெல்லியிலிருந்து ஆள நினைக்கிறார்கள். இதைத் தடுப்பதுதான் ஓரணியில் தமிழ்நாடு செயல்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பேட்டியளித்தார்.